(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 27.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2022 நவம்பர் 08 செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ ரொசான் ரணசிங்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். யூ. எம். அலி சப்ரி,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரேமலால் ஜயசேக்கர,** துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசனாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ கபில அதுகோரல**

கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல
கௌரவ சம்பத் அதுகோரல
கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க
கௌரவ ஹெக்டர் அப்புஹாமி
கௌரவ வஜிர அபேவர்தன
கௌரவ அஸோக அபேசிங்ஹ
கௌரவ ஜே.சீ. அலவத்துவல
கௌரவ டலஸ் அழகப்பெரும
கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே
கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர
கௌரவ எம். உதயகுமார்
கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட
கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன
கௌரவ அகில எல்லாவல
கௌரவ லலித் எல்லாவல
கௌரவ கோவிந்தன் கருணாகரம்
கௌரவ கயந்த கருணாதிலக்க
கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்
கௌரவ ஜயந்த கெட்டகொட
கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல
கௌரவ உதயன கிரிந்திகொட
கௌரவ லலித் வர்ண குமார
கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி
கௌரவ வேலு குமார்
கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு
கௌரவ நாலக பண்டார கோட்டேகொட
கௌரவ மனோ கணேசன்
கௌரவ உதய கம்மன்பில
கௌரவ யதாமிணீ குணவர்தன
கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா
கௌரவ எஸ்.எம். சந்திரசேன
கௌரவ மிலான் ஜயதிலக்க
கௌரவ நலீன் பண்டார ஜயமஹ
கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன
கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன
கௌரவ தயாசிறி ஜயசேக்கர
கௌரவ எம். எஸ். தௌபீக்
கௌரவ குலசிங்கம் திலீபன்
கௌரவ ஜனக பண்டார தென்னகோன்
கௌரவ ஜீவன் தொண்டமான்
கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா
கௌரவ அநுர திசாநாயக்க
கௌரவ எஸ். பீ. திசாநாயக்க
கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக
கௌரவ மயந்த திசாநாயக்க
கௌரவ இசுரு தொடன்கொட
கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த
கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன
கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த
கௌரவ அசங்க நவரத்ன
கௌரவ வாசுதேவ நாணாயக்கார
கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ கிங்ஸ் நெல்சன்
கௌரவ புத்திக பத்திறண
கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்
கௌரவ டிலான் பெரேரா
கௌரவ நிரோஷன் பெரேரா
கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்
கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து
கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே
கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி
கௌரவ உத்திக பிரேமரத்ன
கௌரவ ரோஹண பண்டார
கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார
கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார
கௌரவ றிஸாட் பதியுதீன்
கௌரவ சுதத் மஞ்சுல
கௌரவ எஸ்.எம். மரிக்கார்
கௌரவ இம்ரான் மஹ்ரூப்
கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்
கௌரவ அஜித் மான்னப்பெரும
கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்
கௌரவ மொஹமட் முஸம்மில்
கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா
கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார
கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க
கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்
கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர
கௌரவ சீ.பீ. ரத்நாயக்க
கௌரவ இஷாக் ரஹுமான்
கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி

கௌரவ காமினி வலேபொட

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ ஜகத் சமரவிக்ரம

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி

கௌரவ வடிவேல் சுரேஷ்

கௌரவ ஜோன் செனவிரத்ன

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்

கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்

கௌரவ கபீர் ஹஷீம்

கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்

கௌரவ ஜயரத்ன ஹேரத்

கௌரவ சமன்பிரிய ஹேரத்

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சனாதிபதியின் செய்திகள்:*** சனாதிபதியிடமிருந்து கிடைத்த பின்வரும் செய்தியை சபாநாயகர் வாசித்தார்:—

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/1/12/7

2022 ஒக்தோபர் மாதம் 19 ஆந் திகதி

**மாண்புமிகு மஹிந்த யாப்பா அபேவர்த்தன அவர்கள்**
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்படும் ஆயுதந்தாங்கிய படையின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்பட்ட பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கின்றேன்.

இங்ஙனம் - அன்புள்ள

**ரணில் விக்கிரமசிங்க**
சனாதிபதி

**2. சபாநாயகரின் அறிவித்தல்கள்**: சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், 2022 ஒற்றோபர் 25 ஆம் திகதி 'அற்றோணித் தத்துவம் (திருத்தம்)', 'விருப்பாவணங்கள் (திருத்தம்)' மற்றும் 'மோசடிகளைத் தடுத்தல் (திருத்தம்)' எனும் சட்டமூலங்களில் சான்றுரைகளையும் 2022 ஒற்றோபர் 31 ஆம் திகதி 'நொத்தாரிசு (திருத்தம்)' மற்றும் 'ஆவணங்களைப் பதிவுசெய்தல் (திருத்தம்)' மற்றும் 'அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தம்' எனும் சட்டமூலங்களில் சான்றுரைகளையும் என்னால் எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்."

**II**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'சேர்பெறுமதி வரி (திருத்தம்)' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு மனுக்களின் பிரதிகளும் 'உண்ணாட்டரசிறை (திருத்தம்)' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட எட்டு மனுக்களின் பிரதிகளும் எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன். "

**III**

"பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ வாசுதேவ நாணாயக்கார அவர்கள் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவில் இருந்து இராஜினாமா செய்தமையின் காரணமாக அக் குழுவில் ஏற்பட்ட வெற்றிடத்திற்குப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜயந்த கெட்டகொட அவர்கள் அக் குழுவில் பணியாற்றுவதற்காகப் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 127(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2022 ஒக்டோபர் 21 ஆம் திகதி தெரிவுக்குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**3. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்—

(i) 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான சட்டத்தின் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 2அ ஆம் பிரிவின் கீழ், பெறுமதி சேர் தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 2295/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(ii) 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 2295/09 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iii) 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 4 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 2295/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(iv) 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு,

2022 ஒக்டோபர் 05 ஆம் திகதிய 2300/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்; மற்றும்

(v) 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் வர்த்தக மையங்கள் ஒழுங்குவிதிகள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய 2292/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வொழுங்குவிதிகளை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 1974 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சுங்க (திருத்தச்) சட்டத்தினாலும் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 83 ஆம் இலக்க சுங்க (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 19(அ) ஆம் பிரிவின் கீழ் இறக்குமதிப் பொருட்கள் மீதான சுங்கத் தீர்வை தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 20 ஆம் திகதிய 2298/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரம் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான வெகுசன ஊடக அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று

(4) கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர், 2019 ஆம் ஆண்டுக்கான தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை கமத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரம் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று

(6) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை சுகாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று

(8) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர், 2019/2020 ஆம் ஆண்டுக்கான பீசீசீ லங்கா லிமிடெட்டின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்—

(i) 2019 ஆம் ஆண்டுக்கான சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(ii) 2020 ஆம் ஆண்டுக்கான இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று

**4. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்;

(ii) 1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கம் கொண்ட ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் ;

(iii) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 2அ பிரிவின் கீழான கட்டளை ;

(iv) மதுவரி கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள் ;

(v) 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழான கட்டளை; மற்றும்

(vi) 2023 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டம்

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**5. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) தங்கல்லை, நெதோல்பிடிய, திஸ்ஸ வீதி, இல. 113/2 இல் வதியும் திரு. எம். ஏ. எஸ். விஜேந்திர மித்தெனியவின் 2022.10.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ மஹிந்த அமரவீர சமர்ப்பித்தார்.

(2) (i) பிபிலை, மெதகம, நில்வலகொட இல. 9 ஏ எனும் முகவரியில் வதியும் திருமதி ஜே. எம். தமயந்தி ஹேமலதா ஜயவர்தன 2022.09.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) பிபிலை, ஹீவெல்வல, அம்பவத்த எனும் முகவரியில் வதியும் திரு. ஆர்.பீ. ரஞ்சித் சோமபாலவினது 2022.10.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ விஜித பேருகொட சமர்ப்பித்தார்.

(3) கம்பளை, தொலுவை, கொடவலை எனும் முகவரியில் வதியும் திரு. கே.ஜீ. சம்பத்தினது 2022.09.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சட்டத்தரணி லசஷ்மன் கிரிஎல்ல சமர்ப்பித்தார்.

(4) இரத்தினபுரி, கெடந்தோல, லஹிரு பிளேஸ், இல. 2/ஏ/1, எனும் முகவரியில் வதியும் திரு. ஜீ. கே. எம். குணபாலவினது 2022.10.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ வாசுதேவ நாணயக்கார சமர்ப்பித்தார்.

(5) அம்பேபுஸ்ஸ, கீனதெனிய, இல. 56/3 எனும் முகவரியில் வதியும் திரு. எம்.பீ. எஸ். பிரியங்கரவினது 2022.10.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ முஜிபுர் ரஹ்மான் சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**6. சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதிகோரும் பிரேரணைகள்:** கௌரவ எம். ஏ. சுமந்திரன் அனுவதிக்க கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல பின்வருமாறு பிரேரித்தார்:— அரசியலமைப்பின் 66 (ஊ) உறுப்புரையின் கீழ், திருகோணமலை தேர்தல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ இராஜவரோதியம் சம்பந்தன் அவர்கள் 2022 நவம்பர் 08 ஆம் திகதி முதல் மூன்று மாதங்களுக்கு பாராளுமன்ற அமர்வுகளுக்குச் சமுகமளிக்காதிருப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. பாராளுமன்ற அமர்வுகள்**: பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு சமர்ப்பித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும் 2022 ஒக்தோபர் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை இருக்குமாக. மு.ப. 10.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 (5 ) தொழிற்படுமாக. பி.ப. 5.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. துறைசார் மேற்பார்வைக் குழுக்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு சமர்ப்பித்தார்,— பின்வருமாறு பதினேழு (17) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் பெயர் குறிப்பிட்டு நியமிக்கப்படுமாக:-

(1) மத விவகாரங்கள் மற்றும் சகவாழ்வு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

(2) நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

(3) தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

(4) தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

(5) சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

(6) பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

(7) பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

(8) வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

(9) உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

(10) சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

(11) கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

(12) வெளிநாட்டுத் தொழில்கள் மற்றும் உழைப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

(13) நியாயமான, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

(14) சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

(15) சிறுவர்கள், பெண்கள் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

(16) ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

(17) வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 111 இன் பிரகாரம், துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, ஒவ்வோர் துறைசார் மேற்பார்வைக் குழுவும் தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் எட்டு (8) பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவினதும் கூட்ட நடப்பெண் மூன்று (3) உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. சிறப்புரிமைகள்:** கௌரவ கயந்த கருணாதிலக்க அனுவதிக்க கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம்.ஏ. சுமந்திரன் அவர்களால் தனதும் கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் அவர்களினதும் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2022 ஒக்தோபர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயங்கள், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 இன் ஏற்பாடுகளின் கீழ் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** கௌரவ மிலான் ஜயதிலக வழிமொழிய கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த சமர்ப்பித்த சட்டமூலம்,— "உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (அத்தியாயம் 262) கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்"

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாம் முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 52 (6) இன் கீழ் அறிக்கையிடுவதற்காக, சட்டமூலம் பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**11. ஒத்திவைப்பு (பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துரித நிவாரணம்):** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ வீரசுமன வீரசிங்க தலைமை தாங்குவாராக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப.11.29 மணிக்கு கௌரவ வீரசுமண வீரசிங்க தலைமை தாங்கினார்.)

"கௌரவ இம்ரான் மஹ்ரூப் தலைமை தாங்குவாராக" என கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.49 மணிக்கு கௌரவ இம்ரான் மஹ்ரூப் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 3.11 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

"அவ்வேளை நேரம் பி.ப. 5.00 மணியாகிவிடவே, தலைமைதாங்கும் உறுப்பினர் இன்றையதின சபைத் தீர்மானத்திற்கிணங்க பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2022 நவம்பர் 09 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.